[9th November 1966

கனம் சபாநாயகர் : ஸர்வே பண்ணி, எவ்வளவு தான் வைக்கலாம் என்பதற்கான விவரங்களை முன்கூட்டியே அரசாங்கம் சேகரித்து வைத்திருக்கிறதா என்று கனம் அங்கத்தினர் கேட்கிறார்.

கனம் திரு. பூ. கக்கன் : திருத்துறைப்பூண்டி, நாகைப்பட்டினம், ஓரத்தநாடு ஆகிய பகுதிகளில்தான் வைக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

விடுதி கமிட்டி

*553 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி தாலூகா, மன்னார்குடி அரசினர் மாணவிகள் விடுதிக்கு விடுதி கமிட்டி அமைக்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அக்கமிட்டியில் அங்கம் வகிப்பவர்கள் பற்றிய விபரம் மேஜை மீது வைக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள்—

அலுவல் முறையில் உறுப்பினர்கள்.

1. சகோதரி மேரி என்வாயிலேட், தலைமை ஆசிரியை, புனித ஜோஸப் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, மன்னார்குடி.

2. பள்ளித்துணை இன்ஸ்பெக்டர், மன்னார்குடி.

அரசுப் பணியாளர் அல்லாதார்

1. ஸ்ரீமதி ஹம்சவல்லி, தலைவி, மாதர் சங்கம், அரவத்தூர்.

2. ஸ்ரீ அம்பிகாபதி, எம்.எல்.ஏ., எக்கல், இடும்பவனம் அஞ்சல் திருத்துறைப்பூண்டி தாலூகா.

3. ஸ்ரீ பரமசிவ செம்மதார், காண்ட்ராக்டர், மன்னார்குடி.

அரிசன கிறிஸ்துவர்கள்

*554 கேள்வி.—திரு. கோ. சி. மணி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இந்து ஹரிஜனங்களுக்கு அரசாங்கம் வழங்கும் சலுகைகள் யாவும் கிறிஸ்தவ ஹரிஜனங்களுக்கும் வழங்கும் வகையில் சட்டம் செய்யும் உத்தேசம் அரசாங்கத்துக்கு உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : கிறிஸ்தவர்களாக மதம் மாறிய ஹரிஜனங்களுக்கு எந்தச் சலுகைகள் மறுக்கப்பட்டன என்பதைக் கனம் உறுப்பினர் குறிப்பிடவில்லை.

9th November 1966]

ஹரிஜனங்களுக்கு வழங்கப்படுகிற கீழ்க்கண்ட சலுகைகளை கிறிஸ்தவர்களாக மதம் மாறிய ஹரிஜனங்களும் பெறுவர் :—

1. வீட்டு மனைகள் வழங்குதல்.

2. குடிநீர் வழங்குவதற்காக கிணறுகள், குளங்கள் முதலிய வற்றை வெட்டுதல்.

3. சுகாதாரவசதிகள், நடைபாதைகள் ஏற்படுத்தல், தெரு விளக்குகள் போடுதல், சுடுகாடுகளை அல்லது இடுகாடுகளை ஏற்படுத்தல்.

4. (இச்சலுகைகளைப் பெறத்) தகுதியுள்ள வகுப்பினர்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்துக்காகப் பணியாற்றும் தனிப் பட்ட நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்குதல்.

5. பயிரிடப்படுவதற்காக நிலத்தை ஒப்படை செய்தல் அல்லது குத்தகைக்கு விடுதல்.

6. படிப்பு உதவித்தொகைகள் பள்ளி வசதிகள், மாணவ விடுதி வசதிகள், நண்பகல் உணவு வழங்கல்.

ஹரிஜனங்களுக்கு வழங்கப்படும் சலுகைகளைக் கிறிஸ்தவர் களாக மதம் மாறிய ஹரிஜனங்களும் பெறத் தகுதியுள்ளவர் களாகச் செய்யும் பொருட்டு சட்டமியற்றும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. கோ. சி. மணி : தொழிற் படிப்பு முதலியவைகளுக்காக ஸ்காலர்ஷிப், விவசாயத்திற்காக வழங்கப்படும் மாட்டுக்கான கடன் முதலியவை, மற்றும் இலவசமாகக் கொடுக்கக்கூடிய சலுகை கள் எல்லாம் இந்து அரிசனங்களுக்கு வழங்குவதைப் போல கிறிஸ்துவ அரிசனங்களுக்கும் வழங்கப்படவில்லை என்பது பற்றிப் புகார் அரசாங்கத்திற்கு ஏதாவது வந்திருக்கிறதா? அதன்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே இதுபற்றி இந்த மன்றத்தில் தெரிவித்திருக்கிறேன். சென்ட்ரல் கிராண்ட் ஸ்கீமின்கீழ்க் கொடுக்கும் சலுகைகள் மட்டும் இவர்களுக்குக் கொடுப்பதில்லை. மாநிலத்தைப் பொறுத்த வரையில், என்ன என்ன சலுகைகள் கொடுக்கிறோமோ, அந்தச் சலுகைகள் எல்லாம் அவர்களுக்கும் உண்டு.

Court buildings

* 511 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any site has been chosen for location of the proposed new Court buildings at Madurai ;

(*b*) the estimated cost of the said work ; and

(*c*) when it is likely to be taken up for execution ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) A site with an extent of 16·5 acres in the Managiri tank bed has been settled by the Government in consultation with the Collector of Madurai and the High Court ;